1994 ஏப்ரல் 27]

திரு. சோ. இராசாராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் நேரடிக் கொள்முதல் நிலையங்களைச் சென்ற ஆண்டு அதிகமாகத் திறந்திருந்தும் கொள்முதல் சரியாகச் செய்யப்படவில்லை என்பதை அரசு அறியுமா? தஞ்சை மாவட்டம் விவசாயிகளை நம்பி வாழுகின்ற மாவட்டமாக இருக்கின்ற காரணத்தினால், இந்த ஆண்டாவது, நேரடிக் கொள்முதல் நிலையங்களை அரசு திறக்க முன் வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது, கொட்டையூர் என்கிற கிராமத்திலே சொந்தமாக நேரடிக் கொள்முதல் நிலையத்திற்குக் கட்டிடம் கட்டப்படுமா என்ற கேள்வி. அதற்குப் பதில் அளித்து இருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. இராசாராமன் அவர்கள் அதிகமாகக் கொள்முதல் நிலையங்களைத் திறக்க அரசு முன் வருமா என்று கேட்டிருக்கிறார்கள். அதிகமாகத்தான் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்று மாத்திரம் பதில் சொல்லி, அவர்களுக்கு மேலும் விவரம் வேண்டுமானால் தனியாக வேறு கேள்வி போடவேண்டுமென்று உங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 403, திரு. இரா. அப்பு நடேசன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

403—

குலசேகரம், அருமனை மருத்துவமனைகளில் இரவிலும் சிகிச்சை அளிக்க மருத்துவ அதிகாரி நியமனம்

**20248—திரு. இரா. அப்பு நடேசன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவட்டார் தொகுதி, குலசேகரம், அருமனை அரசு மருத்துவமனைகளில் இரவு நேரங்களில் சிகிச்சை அளிக்க நிலைய மருத்துவ அதிகாரியை அரசு நியமிக்குமா?

(ஆ) ஆம் எனில், நிலைய மருத்துவர்கள் எப்பொழுது நியமிக்கப்படுவர்?

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[1994 ஏப்ரல் 27

(அ) குலசேகரம் மற்றும் அருமனை அரசு மருத்துவமனைகளுக்கு இரவு நேரங்களில் சிகிச்சை அளிக்க தனி மருத்துவர் நியமிக்கும் செயற்குறிப்பு ஏதும் இல்லை. எனினும் மருத்துவமனைகளிலுள்ள மற்ற மருத்துவர்கள் மாற்று முறையில் இரவு நேரப் பணியைக் கவனித்து வருகிறார்கள். எனவே, இரவு நேரங்களில் சிகிச்சை பெற வசதிகள் உள்ளன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள குலசேகரம் மற்றும் அருமனை மருத்துவமனைகள் அங்குள்ள மலைகளுக்குப் பக்கத்திலே இருக்கின்றன. அங்கே தொழிலாளர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். ஏழையெளிய மக்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள். அவர்களுக்கென்று இந்த மருத்துவமனைகள்தான் இருக்கின்றன. குலசேகரத்திலே டாக்டர்கள் 2, 3 பேர்கள் இருக்கிறார்கள். இரவு நேரங்களிலே டாக்டர்கள் வேண்டுமென்று சொன்னால், அவர்களுடைய வீடுகளுக்குச் சென்றால் அவர்கள், மருந்து மற்றும் வேண்டிய சிகிச்சைகளைக் கொடுக்கிறார்கள். ஆனால் அருமனையிலே அப்படி இல்லை. அருமனை அரசு மருத்துவமனையிலே இருக்கின்ற ஒரு டாக்டர், உண்மையிலேயே மருத்துவமனைக்கு ஒழுங்காக வருவதுகூட இல்லை. இப்படிப்பட்ட நிலையிலே அங்கே இரவும் பகலும் டாக்டர்கள் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். அந்த அளவுக்கு அருமனை மருத்துவமனையில் நடந்து கொண்டிருக்கிறது. ஆகையினால், கருணைகூர்ந்து அருமனை மருத்துவமனையிலும் கூடுதலாக ஒரு டாக்டரைப் போட்டாவது, அருமனையிலுள்ள மருத்துவமனைக்கு இரவு நேரத்தில் போனால் சிகிச்சை அளிப்பதற்கு வசதி செய்ய வேண்டும். மேலும் அந்த டாக்டர்கள் மருத்துவமனைக்குப் பக்கத்திலேயே தங்குவதற்கு இட வசதி செய்து கொடுத்தாலும் போதும். ஏனென்றால், அந்த டாக்டர் மருத்துவமனைக்கு அருகாமையிலே தங்குவதில்லை. ஆகவே, அந்த டாக்டர் அங்கே தங்குவதற்குக் குடியிருப்பு வசதி செய்து கொடுத்து அவரை அங்கே தங்கவைத்து, ஏழையெளிய மக்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருமனையிலுள்ள மருத்துவமனை 16 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகும். எனவே 8 படுக்கைகளுக்கு ஒரு மருத்துவர் என்ற

1994 ஏப்ரல் 27]

முறையிலே நாம் வைத்திருக்கிறோம். அங்கே இரண்டு மருத்துவர்கள் பணியாற்றுகிறார்கள். அங்கே சரியாக மருத்துவமனைக்கு வராத மருத்துவர் யார் என்று இப்போதேகூட தெரிவித்தால் உடனடியாக அவர்மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்ள நாங்கள் தயாராக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவமனைக்கு அருகாமையிலே, குறைந்த பட்சம் 8 கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளே அவர்கள் தங்க வேண்டுமென்று விதி இருக்கிறது. வீடு கிடைக்கவில்லை என்று சொன்னாலும்கூட, அந்த மருத்துவமனையிலேயிருந்து 8 கிலோ மீட்டருக்குள்ளே தங்கவேண்டுமென்ற வரையறையை நாம் வைத்து இருக்கிறோம். அதற்குமேலே அவர்கள் தள்ளிப் போனால் நடவடிக்கை எடுக்கலாம். இது ஆரம்ப சுகாதார நிலையங்களுக்குப் பொருந்தும். ஆனால் மருத்துவமனையைப் பொறுத்தவரையில் அந்த ஊரிலேயே கண்டிப்பாக அவர்கள் தங்க வேண்டுமென்ற வழிவகைகளை நாம் வைத்திருக்கிறோம். எனவே, யார் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்தால் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இந்த 16 படுக்கைகளைக் கவனித்துக்கொள்வதற்கு இரண்டு மருத்துவர்கள் போதும். அதுதான் முறையாக எல்லா இடங்களிலேயும் கடைப்பிடிக்கப்படுகிறது. அந்த மருத்துவர் முறையாக அங்கேயே இருந்து கவனிப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்வோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. இரா. அப்பு நடேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், யார் ஒழுங்காக இல்லை என்று சொன்னால் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கலாம் என்று சொன்னார்கள். மிக்க நன்றி. நான் நேரடியாக வந்து அதைச் சொல்லுகின்றேன். குலசேகரத்திலே உண்மையிலேயே நிறைய ஏழையெளிய மக்கள் தினமும் ஆயிரக்கணக்கில் வந்து மருந்துகளைப் பெற்றுச் செல்கிறார்கள். குலசேகரத்திலே இப்போது 3 மருத்துவர்கள் இருக்கிறார்கள். இருந்தாலும் கூடுதலாக ஒரு டாக்டரை நியமித்து, அந்த மருத்துவமனை காம்பௌண்டுக்குள்ளேயே அவர்கள் தங்குவதற்கு குவார்ட்டர்ஸ் வசதி ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அங்கே 4 மருத்துவர்கள் இருக்கிறார்கள். எனவே, அவர்களே போதும் என்று கருதுகிறேன். அதேபோல, அங்கே குவார்ட்டர்ஸ் அமைப்பதைப் பொறுத்தவரையில், நிதிநிலைமைதான் நமக்குப் பிரச்சினை.

[1994 ஏப்ரல் 27

இருந்தாலும், அவர்கள் பக்கத்திலேயே தங்குவதற்கு அவர்களுக்கு எந்தப் பிரச்சினையும் இருக்காது என்று கருதுகின்றேன். வீடுகள் சுலபமாகக் கிடைக்கும். எனவே, அந்த மருத்துவர்கள் அங்கேயே தங்கி, பணியைக் கவனிக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்யலாம். யாராவது அதுபோல சரியாக வராமல் இருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதிக் கொடுத்தால் நிச்சயமாக உரிய கடுமையான நடவடிக்கை எடுப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இதைத் தட்டிக் கழிப்பதற்காக நான் சொல்லவில்லை. மற்ற உறுப்பினர்களேகூட இது போல அவர்கள் சரியாக வருவதில்லை என்ற நிலையை எங்களுக்குத் தெரிவிக்க வேண்டுமென்பதற்காகவே நான் இதைத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 404, திரு. வீ. சுப்பிரமணியன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

404—

சிறுவந்தாடு ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக உயர்த்துதல்

*21234—*திரு. வீ. சுப்பிரமணியன்:*

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கண்டமங்கலம் ஒன்றியம், சிறுவந்தாடு கிராமத்தில் இயங்கும் ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையமாக உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வீ. சுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை என்ற சொல்லுக்கே இடமில்லை என்று பொன்னான ஆட்சி செய்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி ஆட்சியில் மாண்புமிகு அமைச்சரவர்கள் இல்லை என்று தெரிவித்தார்கள். முனைப்போடு